# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : சுகப்பிரியா. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2024.

\- - - - - - -

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் உசிலம்பட்டி டவுன், மூக்கையாத்தேவர் தெருவில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சுமார் 12 வருடத்திற்கு முன்னர், மாலை 6 மணியளவில், என் அப்பா உசிலம்பட்டி டவுனிலுள்ள என் அப்பாவின் போஸ் எலெக்ட்ரானிக்ஸ் கடை வாசலில் என் அப்பாவை வெட்டிவிட்டதாக எனக்கு போன் வந்தது. ஆஜர் எதிரி முன் விரோதத்தின் காரணமாக ஆஜர் எதிரியும், என் கணவரின் தம்பியும் என் சகோதரியும் காதலித்து திருமணம் செய்துகொண்டதால் முன்விரோதம் இருந்தது. அது சம்பந்தமாக ஆஜர் எதிரியும், அவரின் அப்பாவும் காதல் புரிந்த இருவரையும் பிரித்துக்கொண்டு வந்ததால்தான் வீட்டிற்கு வரவேண்டும் என்று

கூறிவிட்டார்கள். அந்த 5 மாத காலமும் என்னை மனரீதியாக துன்புறுத்தினார். அதோடு இதற்கு காரணமானவர்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று என்னிடம் சொன்னார். ஏப்ரல், 7 - 2011 இல் இந்த காதல் திருமணம் விசயமாக என்னையும், எனது மகனையும் எனது அப்பா வீட்டிற்கு ஆஜர் எதிரி அனுப்பிவிட்டார். சம்பவத்திற்கு முந்தைய நாள், ஆஜர் எதிரி என் அப்பா வீட்டிற்கு வந்து என் குழந்தையை தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார். அன்று மாலை கருக்கட்டான்பட்டியிலுள்ள ஆஜர் எதிரியின் தோட்டத்திற்குச் சென்று என் குழந்தையை கொடுக்குமாறு கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரியும், அவரின் அப்பாவும் காதல் திருமண முன்விரோதம் காரணமாக என்னுடைய அப்பா அல்லது உன் தங்கையை வெட்டாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள். அந்தசமயத்தில் நான் குழந்தையை நான் தூக்கிக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்பு, சம்பவத்திற்கு முன்னர், மாலை 4 மணி சுமாருக்கு என் அப்பா வீட்டிற்கு வந்து குழந்தையை ஏன் தூக்கிவந்தாய் என்று என்னை அடித்தார். அதன்பின்பு, எதிரி என் அப்பாவை வெட்டியதாக எனக்குப் போன் வந்தது. நான் என் அப்பாவை உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவரைப் பார்த்தேன். என் அப்பாவிற்கு கழுத்துப் பகுதியில் காயம் இருந்தது. அதன்பிறகு, மேல்சிகிச்சைக்காக மதுரை, அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தார்கள். அன்றைய தினம் இரவு 7 மணியளவில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - இல்லை.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 09.02.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.